ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.7 – வியமுடை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.7 – வியமுடை

‡ வியம் உடை விடை இனம் ⋆
உடை தர மட மகள் ⋆
குயமிடை தட வரை ⋆
அகலம் அதுடையவர் ⋆
நயம் உடை நடையனம் ⋆
இளையவர் நடை பயில் ⋆
கயமிடை கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.1** ॥

இணை மலி மருதினொடு ⋆
எருதிற இகல் செய்து ⋆
துணை மலி முலை அவள் ⋆
மணமிகு கலவியுள் ⋆
மண மலி விழவினொடு ⋆
அடியவர் அளவிய ⋆
கண மலி கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.2** ॥

புயல் உறு வரை மழை ⋆
பொழி தர மணி நிரை ⋆
மயல் உற வரை குடை ⋆
எடுவிய நெடியவர் ⋆
முயல் துளர் மிளை முயல் துள ⋆

வள விளை வயல் ⋆
கயல் துளு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.3** ‖

ஏதலர் நகை செய ⋆
இளையவர் அளை வெணெய் ⋆
போது செய்தமரிய ⋆
புனிதர் நல் விரை மலர் ⋆
கோதிய மதுகரம் ⋆
குலவிய மலர் மகள் ⋆
காதல் செய் கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.4** ‖

தொண்டரும் அமரரும் ⋆
முனிவரும் தொழுதெழ ⋆
அண்டமொடகல் இடம் ⋆
அளந்தவர் அமர் செய்து ⋆
விண்டவர் பட ⋆
மதிள் இலங்கை முன் எரி எழ ⋆
கண்டவர் கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.5** ‖

மழுவியல் படை உடை ⋆
அவனிடம் மழை முகில் ⋆
தழுவிய உருவினர் ⋆
திருமகள் மருவிய ⋆
கொழுவிய செழு மலர் ⋆
முழுசிய பறவை பண் ⋆

எழுவிய கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.6** ‖

பரிதியொடணி மதி ⋆
பனி வரை திசை நிலம் ⋆
எரிதியொடென இன ⋆
இயல்வினர் செலவினர் ⋆
சுருதியொடரு மறை ⋆
முறை சொலும் அடியவர் ⋆
கருதிய கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.7** ‖

படி புல்கும் அடி இணை ⋆
பலர் தொழ மலர் வைகு ⋆
கொடி புல்கு தடவரை ⋆
அகலம் அதுடையவர் ⋆
முடி புல்கு நெடு வயல் ⋆
படை செல அடி மலர் ⋆
கடி புல்கு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ‖ **8.7.8** ‖

புலமனு மலர் மிசை ⋆
மலர் மகள் புணரிய ⋆
நில மகள் என இன ⋆
மகளிர்கள் இவரொடும் ⋆
வலமனு படை உடை ⋆
மணி வணர் நிதி குவைக் ⋆

கலமனு கணபுரம் ⋆
அடிகள் தம் இடமே ॥ **8.7.9** ॥

‡ மலி புகழ் கணபுரம் உடைய ⋆
எம் அடிகளை ⋆
வலி கெழு மதிள் அயல் ⋆
வயல் அணி மங்கையர் ⋆
கலியன தமிழ் இவை ⋆
விழுமிய விசையினொடு ⋆
ஒலி சொலும் அடியவர் ⋆
உறு துயர் இலரே ॥ **8.7.10** ॥

அடிவரவு — வியம் இணை புயல் ஏதலர் தொண்டர் மழு பரிதியொடு படி புலம் மலிபுகழ் வானோர்

வியமுடை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்